**கொழும்புப் பல்கலைக்கழகம் - இலங்கை**

**கலைப்பீடம்**

**மூன்றாம் வருட கலைமாணிப்பரீட்சை - பருவம் - II - 2016/2017**

**PSC 3251 – அரசியல் மற்றும் சமூகக் கோட்பாடுகளின் பிரதான போக்குகள் II**

**நேரம் : இரண்டு (02) மணித்தியாலங்கள்**

**நான்கு (04) வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

**ஒவ்வொரு விடைக்கும் ஆகக்கூடுதலாக பதினைந்து (15) புள்ளிகள் வழங்கப்படும்.**

---

1. (a) அந்தோனியோ கிராம்சியின் மேலாதிக்கம் என்ற எண்ணக்கருவினை விளக்குக.

   (b) கிராம்சி, மேலாதிக்கத்தை அரசியல் சமூகத்துடனும் சிவில் சமூகத்துடனும் எவ்வாறு தொடர்புபடுத்துகிறார் எனப் பரீட்சிக்குக.

2. (a) பிராங்க்பேர்ட் பள்ளியுடன் தொடர்புபடுத்தி 'விமர்சனக் கோட்பாட்டினை' விளக்குக.

   (b) 'விஞ்ஞானக் கோட்பாடு' மற்றும் 'பாரம்பரியக் கோட்பாடு' ஆகியவற்றிலிருந்து விமர்சனக் கோட்பாடு எவ்வாறு வேறுபடுகின்றது?

3. 'இலட்சியக் கருத்து நிலைமை' மற்றும் 'இலட்சியக் கருத்துச் சமுதாயம்' என்பவற்றின் மீது ஜேர்கன் ஹெபமாஸினால் முன்வைக்கப்பட்ட சிந்தனைகளைப் பரீட்சிக்குக.

4. மூன்றாம் உலக நாடுகளில் குறைவிருத்திக்கான காரணங்களை அன்ரே குன்டர் பிராங்க் மற்றும் சமிர் அமீன் ஆகியோர் எவ்வாறு விளக்கினர்? கலந்துரையாடுக.

5. காலனித்துவவாதத்தின் மீதான ஓர் விமர்சன ரீதியான புரிதலை எட்வட் செய்டின் கீழைத்தேயவாதம் எவ்வாறு வளர்த்தது என்பதைப் பரீட்சிக்குக.

6. மிசல் பூகோவினுடைய கோட்பாட்டு ரீதியான கருத்துக்களில் செல்வாக்கு செலுத்திய தத்துவார்த்த மற்றும் அறிவார்ந்த மரபுகள் யாவை? கலந்துரையாடுக.

7. பின்வருவனவற்றில் ஏதேனும் **இரண்டிற்கு (02)** சிறுகுறிப்புகள் எழுதுக:

   (a) லூயிஸ் அல்தூசரின் கருத்தியல் என்ற கருத்து

   (b) பியரே போதியூவினுடைய அடையாள மூலதனம் என்ற கருத்து

   (c) ஜீன் பவுல் சாட்ரேவினுடைய இருப்பு என்ற எண்ணக்கரு

   (d) ஜக்கியூஸ் லக்கானின் கண்ணாடி படிமம் என்ற எண்ணக்கரு.

**********************************